

வால்ட் டிஸ்னி
ஃபெர்டினாண்ட் மற்றும் கொள்ளையர்கள்

ஃபெர்டினாண்ட் என்ற எருதின்
புதிய வால்ட் டிஸ்னி சாகசம்



தமிழில்: ஸ்நேகா





ஃபெர்டினாண்ட் மற்றும் கொள்ளையர்கள்

வின்சென்ட் ஜெஃப்ஃபர்ட்ஸ்

மன்ரோ லீஃபால் எழுதப்பட்டு ராபர்ட் லாசனால் படம் வரையப்பட்டு வைக்கிங் ப்ரெஸ் பதிப்பித்த த லைஃப் ஆஃப் ஃபெர்டினான்ட் என்பதை அடிப்படையாகக் கொண்டது.







ஃபெர்டினாண்ட், ஸ்பெயினில் வாழ்ந்த ஒரு வலிமையான இளம் காளை.

அவன் மிகவும் சாதுவானவன்.

மற்ற இளம் காளைகளைப் போலச் சண்டையிட அவன் விரும்பவில்லை.

தனக்குப் பிடித்தமான கார்க் மரத்தடியில் அமைதியாக அமர்ந்துகொண்டு, பூக்களை முகர்வதையே அவன் விரும்பினான்.






ஒரு நாள் ஃபெர்டினாண்ட்
ஒரு தேனீயின் மீது
அமர்ந்தான்.



தேனீக் கொட்டு அவனை ராக்கெட்
போலப் எகிற வைத்தது.



அவன் மற்ற இளம் காளைகளை பௌலிங்
குச்சிகளைப் போலச் சிதறடித்தான்.



காளைச் சண்டைக் களத்தைச் சேர்ந்த சிலர் ஃபெர்டினாண்ட் ஓடுவதைப் பார்த்தார்கள்.

தாங்கள் இதுவரை பார்த்ததிலேயே ஆக்ரோஷமான எருது என்று அதை நினைத்தார்கள்.



அதனால் அவர்கள் ஃபெர்டினாண்டை மாட்ரிட்டில் உள்ள காளைச் சண்டை அரங்குக்கு அழைத்துச் சென்றார்கள்.





ஆனால் ஃபெர்டினாண்ட் சண்டையிடவில்லை.

களத்திற்குள் சில பூக்கள் வீசப்பட்டிருந்தன.

ஃபெர்டினாண்ட் அமைதியாக அமர்ந்து, அவற்றை முகர்ந்து பார்த்தான்.



காளைப்போர் வீரன் கடும் சினமடைந்தான். அவன் தன் கால்களை ஆவேசமாக மிதித்தான்.



அவன் ஃபெர்டினாண்டைப் பார்த்து முகத்தைச் சுளித்தான்.



அவன் அழுது அலறினான்.



அவன் கெஞ்சினான்; ஆனால் அதனால் எந்தப் பயனும் இல்லை.



ஃபெர்டினாண்ட் அவமானத்துடன் காளைச் சண்டைக் களத்தை விட்டு வெளியேறினான்.



ஃபெர்டினாண்ட் பண்ணைக்குத் திரும்பினான்.

மீண்டும் வீட்டிற்கு வந்ததில் அவன் மகிழ்ச்சியடைந்தான்.
விவசாயியின் குழந்தைகளும் அவனைக் கண்டதில் மகிழ்ச்சியடைந்தார்கள்.


குழந்தைகள் ஃபெர்டினாண்டிற்காக ஒரு தோட்டத்தை அமைத்தனர்.

அவனுக்கு மிகவும் பிடித்த கார்க் மரத்தின் அருகே அவர்கள் இன்னும் அதிகமான பூக்களை நட்டனர்.



ஒவ்வொரு பிற்பகலிலும் ஃபெர்டினாண்ட் அக்கம் பக்கத்துச் சிறுவர்களைச் சுமந்து சென்றான்.

ஒரே நேரத்தில் பதினான்கு சிறுவர்களைச் சுமந்து சென்ற உலக சாதனை படைத்தான்.





ஃபெர்டினாண்ட் அந்தப் பண்ணையிலும் வேலை செய்தான்.


காலையில், விவசாயியான அன்டோனியோவிற்கு அவன் நிலம் உழுவதில் உதவினான்.

அவன் மிகுந்த வலிமை வாய்ந்தவனாக இருந்ததால், ஒரே நேரத்தில் இரண்டு கலப்பைகளை அவனால் இழுக்க முடிந்தது.


சில சமயங்களில், ஒரு புதிய மேய்ச்சல் நிலத்தைச் சீர்செய்ய அவன் உதவினான்.

தன் கொம்புகளால் பெரிய பாறைகளைத் தூக்கி, அவற்றை நேர்த்தியான ஒரு கல்சுவரில் வீசி எறியும் ஆற்றல் அவனுக்கு இருந்தது.





மாலை நேரங்களில், ஃபெர்டினாண்ட் தன் மரத்தடியின் கீழ் அமைதியாக அமர்ந்து, பூக்களை முகர்ந்து கொண்டிருந்தான்.



ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பத்தினர் தேவாலயத்திற்குச் சென்றனர்;

ஃபெர்டினாண்ட் தன் தோட்டத்திலேயே தங்கியிருந்தான்.

பூக்களின் மீது மிதித்துவிடாமல் இருக்க அவன் மிகவும் கவனமாக இருந்தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, அந்தக் குடும்பத்தினர் கதேவாலயத்திற்குச் சென்ற பிறகு, இரண்டு கொள்ளையர்கள் வண்டியில் அங்கு வந்தனர்.

பல வாரங்களாக அவர்கள் அந்தப் பகுதியில் திருடி வந்திருந்தனர்.



"அதோ பார்! அங்கே ஒரு பெரிய காளை இருக்கிறது!" என்றான் குட்டையான, குண்டான கொள்ளையன்.

அது ஃபெர்டினாண்ட்தான்," என்றான் உயரமான கொள்ளையன். "சண்டையிட மறுப்பதில் அவனுக்குப் பெரும் பெயர் உண்டு. அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.""


கொள்ளையர்கள் ஃபெர்டினாண்டைக் கடந்து வண்டியில் சென்றனர்.

அவன் அவர்களைத் தொந்தரவு செய்யவில்லை. அவன் அவர்களுக்கு ஒரு நட்பு ரீதியான புன்னகையை மட்டுமே அளித்தான்.






கொள்ளையர்கள் தங்கள் வண்டியைப் விவசாயியின் மிகச் சிறந்த பொருட்களால் நிரப்பினார்கள்.



இப்போது அவர்கள் அங்கிருந்து கிளம்ப அவசரப்பட்டனர். கொள்ளையர்கள் ஒரு குறுக்குவழியில் செல்ல முடிவு செய்தனர். அவர்கள் நேராக ஃபெர்டினாண்டின் தோட்டத்தை நோக்கிச் சென்றனர்.



ஃபெர்டினாண்ட் அவர்களைத் தடுக்க முயன்றான்.

ஆனால் கொள்ளையர்கள் சிரித்தார்கள்.



வண்டி தோட்டத்தின் ஊடே
அதிவேகமாகச் சென்றது.
தோட்டம் அழிந்துபோனது!


ஃபெர்டினாண்ட் கடும் சீற்றமடைந்தான்!
அவன் மூச்சிரைத்தான்.

அவன் தரையைக் காலால் கீறினான்.



அவன் தாக்கப் பாய்ந்தான்.

கொள்ளையர்கள் பண்ணையை விட்டு வெளியேறி,
சரியான நேரத்தில் வாயிலைப் பலமாகச் சாத்தினர்.



பெர்டினாண்ட் பெரிய கதவில் மோதினான்.





அவன்
கிட்டத்தட்ட
மயக்கமடைந்து
விட்டான்.



தேவாலயத்திலிருந்து வீடு திரும்பும் வழியில், அந்தக் குடும்பத்தினர் கொள்ளையர்களைக் கடந்து சென்றனர்.
விவசாயியின் மனைவி, வண்டியில் இருந்த தனது மெழுகுவர்த்தித் தாங்கியைப் பார்த்தார்.



அந்தோனியோ தன் வண்டியைத் திருப்பி, கொள்ளையர்களைத் துரத்திச் சென்றான்.

அந்த விவசாயி
கொள்ளையர்களை
விரட்டிப் பிடித்தார்.
அவர்களை நிற்குமாறு
அவர் கத்தினார்.





ஒரு கொள்ளையன் ஒரு பெரிய
கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தான்.



"உன் கடிவாளத்தைக் கீழே
போட்டுவிட்டு, கைகளை மேலே
உயர்த்தியபடியே வைத்திரு," என்று
அவன் கட்டளையிட்டான். "எங்களைப்
பின்தொடர முயற்சிக்காதே."

ஃபெர்டினாண்ட் கொள்ளையர்கள் மீது இன்னும் கோபமாகவே இருந்தான். பண்ணையிலிருந்து வெளியேற அவனுக்கு வேறொரு வழி தெரிந்திருந்தது. அவன் வயல்களின் ஊடே வேகமாக ஓடினான்.



மேலும், ஒரு பழைய மரக் கதவை உடைத்துக்கொண்டு சென்றான்.





கொள்ளையர்கள் விலகிச் சென்று கொண்டிருந்தபோது, பண்ணையாரின் மகன் ஒரு புழுதிப் படலத்தைக் கண்டான். அது வயல்களின் ஊடே வந்துகொண்டிருந்தது.

அது ஒரு சூறாவளி போலத் தெரிந்தது - ஆனால் உண்மையில் அது ஃபெர்டினாண்ட்.



ஃபெர்டினாண்ட் கொள்ளையர்களின் வண்டியின் மீது ஒரு ரயில் என்ஜினைப் போல மோதினான்.

அனைத்தும் உடைந்து சிதறின!

கொள்ளையர்கள் மரத்தை நோக்கி ஓடினார்கள், ஆனால் ஃபெர்டினாண்ட் அவர்களைத் துரத்தினான்.





குடும்பத்தினர் காவல்துறையினரை
அழைக்கச் சென்றபோது, அவன்
கொள்ளையர்களைக் காவல் காத்தான்.







காவல்துறையினர் கொள்ளையர்களைக்
கட்டிப்போட்டு அழைத்துச் சென்றனர்.

ஃபெர்டினாண்ட் ஒரு வீரன்!

நகர மக்கள் அவனுக்கு ஒரு ஊர்வலம் நடத்தினர்.

இப்போது அவர்கள் கொள்ளையர்களிடமிருந்து விடுபட்டிருந்தனர்.



